ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 15-9-2015 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

74. சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள், மிட்டாய் கடைகள், கிளப்புகள், உணவு வழங்குபவர்கள் மற்றும் பிற உணவுச்சாலைகளால் அவ்வுணவகங்களுக்குள்ளோ, உட்பகுதியிலோ அல்லது வெளியிடங்களிலோ விற்பனை செய்யப்படும் வணிகச் சின்னம் பொறிக்கப்படாத உணவுப் பொருட்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 9-3-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 32-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

75. உயரழுத்த மின்சக்தி நுகர்வோர்கள், ஜென்செட்டுகளில் பயன்படுத்துவதற்காக, யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, விற்பனை செய்யப்படும் எரி உலை எண்ணெய்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 1-8-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 103-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2015 செப்டம்பர் 14]

76. சென்னை, திருவாளர்கள் முக்தி (எம்.எஸ். தாதா பவுண்டேஷன்) நிறுவனத்திற்கு, யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, செயற்கைக் கை, கால்கள் மற்றும் தாங்குக் கட்டைகள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 15-10-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 79-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

77. சென்னை, புற்றுநோய் மருத்துவமனைக்கு (WIA), யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 12-12-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 95-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

78. சென்னை, தாம்பரம் (மேற்கு), திருவாளர்கள் இந்து மிசன் மருத்துவமனைக்கு, யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து காலவரை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 12-12-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 96-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

79. சென்னை, திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி அமைப்பிற்கு, யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலவரை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இரத்தத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவையான மருந்துகள், மருத்துவக் கருவிகள் அல்லது சாதனங்கள் மற்றும் உபகருவிகள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின்

8-1-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 4-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

80. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டிலுள்ள திருவாளர்கள் சேஷமா மறுவாழ்வு பயிற்சி நிலையம் நடத்திய பயிற்சி வகுப்பின்போது தயாரித்த பொருட்கள், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 23-2-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 30-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

81. யூரியா தயாரிப்புக்காக, மத்திய பொதுத் துறை நிறுவனமான திருவாளர்கள் மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், மணலி மற்றும் திருவாளர்கள் சதர்ன் பெட்ரோகெமிக்கல் இன்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன், தூத்துக்குடி ஆகியவற்றிற்கு எண்ணெய் நிறுவனங்கள், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, விற்பனை செய்கிற நாப்தாமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 23-2-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

82. யாதொரு வணிகரால், (i) நெய்தலுக்கு முன்பாக நூலுக்கு பசையிடுவது தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) ஏலக்காய் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரி வீதம் (iii) கைபேசி விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரி வீதம் ஆகியவற்றைக் குறைத்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 25-3-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 45-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

83. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 10-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 50-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

84. (i) *மனித நுகர்வுக்குப் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான மதுபானங்கள், பீர், ஒயின் மற்றும் குடுவை பீர் ஆகியவற்றினை* FL2 *(கிளப்புகள்) மற்றும்* FL3 *(ஹோட்டல்கள்) உரிமதாரர்களுக்கு டாஸ்மாக்-கால் மேற்கொள்ளப்பட்ட இம்மாநிலத்தின் இரண்டாம் முனை விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் மற்றும்* (ii) *மனித நுகர்வுக்குப் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான மதுபானங்கள், பீர், ஒயின் மற்றும் குடுவை பீர் ஆகியவற்றினை* FL2 *(கிளப்புகள்) மற்றும்* FL3 *(ஹோட்டல்கள்) உரிமதாரர்களால் உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இம்மாநிலத்தின் மூன்றாம் முனை விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 21-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 53-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

85. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 30-6-2015 ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ/செ.செ.ஒ/9/1-12-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

86. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(6)த் துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை(நிலை) எண் 20-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு

மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

304. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

305. வருவாய்த் துறை பற்றிய மக்கள் சாசனம், 2015. (தமிழ், ஆங்கிலம்)

306. மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

307. மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

308. மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

309. "போக்குவரத்துத் துறையின் செயல்திறன், 2015" என்கிற சிறுநூல். (தமிழ்)

310. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015-2016. (தமிழ்)

311. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் போக்குவரத்துத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015-2016. (தமிழ்)